வியாபாரிகளே
உங்களுக்குத் தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக் கொள்ள:
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 11 சனிக்கிழமை (27 – 08 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 273

பொருளாதாரத் தடையை நீக்கினால் வரவேற்பு

நிபந்தனையில்லாத பேச்சுகளுக்கு புலிகள் தயார்; அரசு சுமுக நிலையை உருவாக்குவது அவசியம்

அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் செய்தி மாநாட்டில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 27

- புதிய அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எமது இயக்கம் தயார்;
- பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக நடைபெறுவதற்குச் சுமுகமான சூழ்நிலை தேவை;
- அத்தகைய சுமுக சூழ்நிலையை உருவாக்குவதற்கு போர் நிறுத்தம் அவசியம்;
- பொருளாதாரத் தடை நீக்கப்படுமாயின் அதனை வரவேற்பதோடு, நல்லெண்ணத்துக்கான ஆக்க பூர்வ நடவடிக்கையாகக் கருதுவோம்;
- போக்குவரத்துத் தடையும் நீக்கப்பட வேண்டும். மக்கள் இராணுவச் சோதனைக்கு உட்படாதவாறு சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்
- புதிய அரசு சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும், உண்மையாகவே விரும்பினால் —
- போர், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை ஆகிய எமது மக்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்ட அநீதிகளுக்கு முடிவு கட்ட வேண்டும்"
- முதற் கட்ட — ஆரம்பகாலப் பேச்சுவார்த்தை தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும்;

சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான புதிய அரசு இனப்பிரச்சினை, யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பன சம்பந்தமாக கடந்த ஒரு வாரத்தில் வெளியிட்ட கருத்துக்கள் சம்பந்தமாக—

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை விளக்கிய அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை, அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவற்றை அறிவித்தார். பிரஸ்தாப மாநாட்டில் அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனும் உடனிருந்தார்.

சந்திரிகா விருப்புக்குவரவேற்பு

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் திரு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தவை வருமாறு:-

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்; போருக்கு முடிவு காணவேண்டும்; சமாதானப் பேச்சுக்கள் மூலம் இணக்கம் காணவேண்டும் என்று சந்திரிகா குமாரணதுங்க விடுக்கும் அறிக்கைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் வரவேற்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஈழத்தமிழரின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்த சந்திரிகா அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதனை எமது இயக்கம் மனப்பூர்வமாக வரவேற்கின்றது.

புதிய அரசுடன் நிபந்தனைகள் அற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்த எமது இயக்கம் தயாராகவிருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை நீண்ட காலமாகவே நாம் திறந்து வைத்துள்ளோம். கடந்த 4 ஆண்டு காலமாக — 2ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான காலத்தில் இருந்து நாம் சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறோம்.

போர் நிறுத்தத்துக்கும், பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறோம் என்று பல தடவைகள் மாறிமாறி அறிக்கைகள் விட்டு வருகிறோம். எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்கள் கூட எமது நிலைப்பாட்டை வலியுறுத்தி சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

சுமுகமான சூழ்நிலை தேவை

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆயினும், பேச்சுக்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில், பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் நடைபெறுவதாயின், ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்படுவது நல்லது. ஒரு சமாதானச் சூழ்நிலை உருவாக்கப்படுவது நல்லது.

ஒரு சமாதான சூழலில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவது தான் உகந்தது.

இதற்கு போர் நிறுத்தம் அவசியம். எனவே போர் நிறுத்தம் செய்து ஒரு சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

அடுத்ததாக, தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு முயற்சி எடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது.

கடந்த 4 ஆண்டுகளாக இந்தப் பொருளாதாரத் தடை காரணமாக எமது மக்கள் தாங்கொணாத் துன்பத்துக்கு ஆளாகி வருகிறார்கள். இது மக்களின் அன்றாட வாழ்வை பாரிய அளவில் பாதிக்கிறது.

இந்தத் தடையை ஐ.தே.க. அரசாங்கம் எமது மக்கள் மீது திணித்தது.

போக்குவரத்து தடையையும்...

இந்தப் பொருளாதாரத் தடை நீக்கப்படுமாயின், நாம் அதனை பெரிதும் வரவேற்போம்.

சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையாகவே இதனை நாம் கருதுவோம்.

பொருளாதாரத் தடையோடு போக்குவரத்துத் தடை பின்னிப்பிணைந்து இருக்கிறது. ஆகவே பொருளாதாரத் தடையை நீக்குவதோடு, போக்குவரத்துத் தடையையும் நீக்கப்பட்டால் தான் வடபகுதியில் பொருளாதார நிலைமை சீரடையும்.

எனவே போக்குவரத்துத் தடைகளை நீக்குவதற்கும் அரசு முயற்சிகளை எடுத்தால் தமிழ் மக்கள் அதனை பெரிதும் வரவேற்பார்கள்.

எமது மக்கள் தமது சொந்த மண்ணில் — தமது பாரம்பரிய பூமியில் — இராணுவ சோதனைகளுக்கு உட்படாதவாறு சுதந்திரமாகப் போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களது அடிப்படை உரிமையாகும்;

(4 ஆம் பக்கம் பார்க்க)

படகுச் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஒக 27

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-த)

அச்சுவேலி ஷெல் வீச்சில் ஒருவர் பலி

அச்சுவேலி, ஒக 27

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல்வீச்சின் போது அச்சுவேலி, பத்தமேனியில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயம் அடைந்தனர்.

நேற்றுக்காலை 4.00 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பத்தமேனி, பாரதி வீதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் இறந்தவர் ஏழு பிள்ளைகளின் தந்தையான கந்தர் முத்தர் (வயது 60) என்று தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் விழுந்த இடத்திலேயே இவர் வயிற்றுப் பகுதி சிதைந்து மரணமானார்.

மேலும் தம்பிஐயா ரனீஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடைகள் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஒக 27

கடற்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வெற்றி நாள் வீரவணக்க நிகழ்வுகளை ஒட்டி வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று சனிக்கிழமை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

வீரவணக்க கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 27

காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்குள் சென்று ஸ்ரீலங்கா கடற்படைத் தாய்க்கப்பலையும் அதிவேக டோறா படகையும் தகர்த்து வீரச்சாவடைந்த —

முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வெற்றி நாள் வீரவணக்க கூட்டங்கள் கோட்டரீதியாக இன்று (சனி) இரவு 7 மணி முதல் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பகுதியில் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் —

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் —

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இரவு 7-30 மணிக்கும் —

[illegible] நாகர்கோவில் முன்றிலிலும் [illegible] இடம் பெறும்; (ஐ)

சந்திரிகா யாழ். வந்தால் அவருடன் பிரபா பேசுவார்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 27

இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்திலேயே நடைபெற வேண்டும்.

இப்பேச்சுவார்த்தையின் போது மத்தியஸ்தம் தேவைப்படாது. பேச்சுவார்த்தைக்காக சந்திரிகா யாழ்ப்பாணம் வருவாரானால் தேசியத் தலைவருடன் அவர் பேச முடியும்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

செய்தியாளர்களின் கேள்விகளும் அன்ரன் பாலசிங்கம் அளித்த பதில்களும் வருமாறு:-

உத்தியோகபூர்வ தொடர்பு இன்னுமில்லை

கேள்வி: அரசாங்கம் விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான பதிலை எதிர்பார்த்திருப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார். அது பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்: அனுருத்த ரத்வத்தை எங்களுடன் உத்தியோகபூர்வமாக இன்னும் எந்தவித தொடர்பும் கொள்ளவில்லை. அரசாங்கமும் இதுவரைக்கும் உத்தியோகபூர்வமாக எங்களுடன் தொடர்பு ஏதும் கொள்ளவில்லை. அவர்கள் செய்தியாளர் மாநாடுகளைக் கூட்டி அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உத்தியோகபூர்வமான முறையில் எங்களுடன் தொடர்பு கொண்டால், உத்தியோகபூர்வமான முறையில் நாங்கள் அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். ஆனால் இதுவரையில் உத்தியோகபூர்வமான முறையில் தொடர்பு கொள்ளவில்லை.

செய்தியாளர் மாநாடு மூலம் தான் நாம் இப்போது பேசுகிறோம்; அவர்களும் அப்படித்தான்.

அனுருத்த அழைப்பு விடுத்திருக்கலாம்

கேள்வி: கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றில், அனுருத்த ரத்வத்தையிடம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப்புலிகளுடன் பேச லண்டனுக்கு போவாரா என்று செய்தியாளர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் வந்த பின்னர் தான் அதுபற்றி கூறமுடியும் என்று அனுருத்த ரத்வத்த பதில் அளித்துள்ளார். அதுபற்றி ஏதும் கூற முடியுமா?

பதில்: நாங்கள் இன்னும் அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வமான முறையில் எந்த வகையிலும் தொடர்பு கொள்ளவில்லை. அப்படி தொடர்பு கொள்வதாக இருந்தாலும் இங்கு தான் தலைமைப்பீடம் இருக்கிறது. யாழ்ப்பாணத்துடன் தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக வெளிநாடுகளில் எமது வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்வதில் அர்த்தமில்லை.

ஆனாலும் அரசாங்கம் எம்முடன் தொடர்பு கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன.

அனுருத்த ரத்வத்தைக்கு நாங்கள் அதிகாரபூர்வமான முறையில் புலிகளுடன் பேச விரும்புகிறோம் என்று கூறி ஒரு செய்தியைத் தருவதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. ஆனால் அவர் இன்னும் நேரடியாக தரவில்லை.

நாங்கள் பத்திரிகைகள் மூலம்தான் எங்கள் நிலைப்பாட்டைச் சொல்லலாம். ஆகவே உத்தியோகபூர்வ முறையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் இன்னும் தொடர்பு வரவில்லை. வரும்போது நாம் உத்தியோக பூர்வமான முறையில் பதில் அனுப்புவோம்.

பேச்சுக்கு மத்தியஸ்தம் தேவை இல்லை

கேள்வி: பேச்சுவார்த்தைக்கு யாராவது மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என விரும்புகிறீர்களா? அல்லது இலங்கை அரசாங்கத்துடன் நேரடியாகப் பேச விரும்புகிறீர்களா?

பதில்: பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடியாக நடப்பதையே நாங்கள் விரும்புகிறோம். இனி மத்தியஸ்தர்கள் தேவை இல்லை.

காலம் காலமாக — கடந்த 4 வருடங்களாக — எத்தனையோ பேர் வந்து எங்களுடன் பேசி விட்டுப் போனார்கள்.

பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தர்கள் அவசியமில்லை. இரண்டு தரப்புக்கும் மத்தியில் ஒரு தொடர்பை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைப்பதற்கு ஏதாவது உதவிகளைச் செய்யலாம்.

ஆனால் இனி ஏது தேவையில்லை. ஏனெனில் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கு விரும்புகிறது. விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு விரும்புகிறார்கள்.

அவர்களும் சமாதானக் கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறார்கள். நாமும் சமாதானக் கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறோம்.

யாழ்ப்பாணத்திலேயே பேச வேண்டும்

கேள்வி: பேச்சுவார்த்தைகள் கொழும்பில் நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் செல்வீர்களா?

பதில்: பேச்சுவார்த்தைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்தில் நடப்பதைத்தான் நாம் விரும்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தை நடப்பதுதான் நல்லது.

அரசாங்கப் பிரதிநிதிகள் இங்கு வந்தால், விடுதலைப் புலிகள் இயக்கம் அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு கொடுக்கும். ஆனால் அதேநேரத்தில் எங்களது பிரதிநிதிகள் கொழும்புக்கு போனால், அவர்களுக்கு முழுமையான பாதுகாப்புக் கொடுப்பதற்கான அதிகாரங்கள் இப்போதைய அரசுக்கு இல்லை.

நாம் கொழும்பு செல்ல முடியாது

கேள்வி: விடுதலைப் புலிகள் தங்களுடன் இன்னும் உத்தியோகபூர்வமாக தொடர்பு கொள்ளவில்லை என்று அரசும், அரசாங்கம் உங்களுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று நீங்களும் கூறுவதைப்பார்த்தால் அது நீண்டகாலம் செல்லும்போல தெரிகிறதே?

பதில்: எங்களது நிலைப்பாடு பற்றி நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறோம் என்று கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு தகவல் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ பேர் வந்துபோகிறார்கள். ஆயர் வருகிறார், பிரமுகர்கள் வருகிறார்கள், அவர்களிடம் எல்லாம் இந்தச் செய்தியை அனுப்பிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

கடந்த பல வருடங்களாக அவர்கள் எந்தவித பதிலும் சொல்லவில்லை. பேசாமல் இருக்கிறார்கள்.

இப் பொழுது புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. நாங்கள் அதே செய்தியைத் தான் சொல்கிறோம். செய்தியாளர்கள் மூலமாகவும், வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மூலமாகவும் சொல்கிறோம்.

உத்தியோகபூர்வமான முறையில் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். அல்லது பிரதிநிதியை அனுப்பலாம் அல்லது மத்தியஸ்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல இன சடைமுயல், சில்கி, பன்டம் முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். திருமதி சண்முகநாதன், இத்தியடி பிள்ளையார் கோவிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி. (32576)

நாலு போத்தல் பால் கறக்கும் சனல் ஆடும், கடா குட்டியும் விற்பனைக்குண்டு. A. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32580)

இலிக்கோழிச் சேவல்களும், வான்கோழிச்சேவல்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மே/பா சாயி மெடிக்கல்ஸ், திருநெல்வேலி. (32572)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் 465/1, இலக்கத்தில் அரைப் பரப்பு கொண்டுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. கனகரத்தினம், சி. சி. பாடசாலைக்கு அருகில் நீர்வேலி. (32557)

அடை வைக்கக்கூடிய நல்லின கோழி முட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32526)

சிறிய கட்டிலுக்குரிய ஆர்பிகோ குசன் மெத்தை விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [7724]

தனிப் பாவனையில் உள்ள Honda CD50 [கோல்ட் ராக்] சகல பதிவுப் புத்தகத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. மகேஸ்வரன், ஸ்ரேசன் றோட், மல்லாகம். [சித்தி மருந்துக்கடைக்கு அருகில்] சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்வையிடலாம். [7615]

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீசாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்பு (ஆங்கிலம்-தமிழ்) மீண்டும் 1-9-94இல் ஆரம்பமாகின்றன. இடம்: சிறி வீதி, (தாளையடி ஒழுங்கை), திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. [32564]

அறை வாடகைக்கு

கே. கே. எஸ் வீதி 356 இலக்கத்தில் நகை வேலைக்குரிய அறை வாடகைக்கு உண்டு கு. பாலசுந்தரம், குளப்பிட்டி, கொக்குவில். (32571)

கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. (Running Condition) பற்றறியுடன் தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டு கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (32582)

தேவை

தங்கியிருந்து ஆடுகள், கோழிகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (32524)

பில் எழுதி புடைவை வியாபாரம் செய்யக்கூடிய பெண் பிள்ளை தேவை. முகவரி: அங்கவின் ரெக்ஸ்ரைல், இல. 43, 48, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [32556]

அனுபவமும், தராதரமும் உடைய பாலர் ஆசிரியை தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். சுய விபரக்கோவையுடன் ஞாயிறு 10 மணிக்கு நேரில் வரவும். இல. 37, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (7721)

பெண் விற்பனையாளர்/காசாளர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவு தேவை. சொந்தக் கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்தை நேரில் காலை, மாலை சமர்ப்பிக்கவும். நல்லூர் வீடியோ சென்ரர். இல. 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32525)

வெளிவந்துவிட்டது

துரித மீட்டலுக்கான சைவ நெறி வினா-விடை ஆண்டு 11 ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி பொத்தகசாலை, கச்சாய் வீதி, சாவகச்சேரி. ஏகவிநியோகத்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8930)

மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8686)

பயிற்சி வினாத்தாள்கள்

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளிற்கான அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (7560)

ENGLISH

Spoken English with Grammar தெளிவான முறையில் விவரமான விளக்கத்துடன் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது. தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும். V. K. Kandasamy A. I. B. Part I (London) Inter (London) Dip-in-English இல. 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அருகில்), கொக்குவில். (7723)

காவேரி சீயாக்காய்

தரத்தின் சிகரம் காவேரி. 80% சீயாக்காயும் 20% ஐந்து வகை இயற்கைப் பொருள்களும் சேர்த்து தயாரிக்கப்பட்டு இப்போது எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது காவேரி சீயாக்காய்ப்பவுடர். ஏகவிநியோகஸ்தர் நியூ வசந்தாஸ் ஸ்ரோர்ஸ், 350, பாசிஷால் வீதி, குருநகர். (32228)

மாதாந்த அறிவியலரங்கு - 6

நாளை 28-08-1994 ஞாயிறு
பிற்பகல் 3மணி

இடம்: உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

தலைப்பு: **தமிழர் பாரம்பரிய பிரதேச நில அபிவிருத்தியும் குடியேற்றத் திட்டங்களும்**

நிகழ்த்துபவர்:
செங்கை ஆழியான் அவர்கள்
(கலாநிதி க. குணராசா S. L. A. S.)

அறிவுத் தேடல் மிக்கோர் வருக!

— நூலக அபிவிருத்திச் சபை:
பிரதேச சபை பொது நூலகம்,
உசன், மிருசுவில்.

விளம்பர உதவி:
விஜிதா ரெக்ஸ்ரைல்
23, நவீன சந்தை, சாவகச்சேரி.
[32574]

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவவருடம் ஆவணித்திங்கள் 12ஆம் நாள் [28- 8 1994] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-12 மணிவரையுள்ள ஸப்தமி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த

★ சுபவேளையில் ★

வேலணையூர்
திரு திருமதி. நா. செல்வரட்ணம்
அவர்களின் சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
சந்திரமோகன்
அவர்களுக்கும்
(டென்மார்க்)

யாழ் திருநெல்வேலி
திரு. திருமதி பொ. தங்கராசா
அவர்களின் சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
காயத்திரி
அவர்களுக்கும்
(டென்மார்க்)

இறைவன் திருவருள் துணை கொண்டு டென்மார்க்கில் நடைபெறும் திருமணத்தை யொட்டி அன்றைய தினம் மாலை 4மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம் ★

ஃ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ஃ

திரு திருமதி ஆ. நா. செல்வரட்ணம்,
திரு திருமதி இ. அருளானந்தம்,
"காயத்திரி இல்லம்",
பதிவுகாரர் ஒழுங்கை,
(தலங்காவல் பிள்ளையார் கோயிலடி),
திருநெல்வேலி.

Mr. Mrs Ponthiyagarajah,
Selvan S. Koneswaran
Torshaven 4 I sal tv,
4500, Nykobing Sj,
Denmark.

(32581)

யாழ். வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

காங்கேசன்துறை துறைமுகத்தில் சிறீலங்கா கடற்படைக்கப்பலினை வெற்றிகரமாக தகர்த்த முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் நினைவு எழுச்சி நாளையொட்டி யாழ் நகர் சகல வணிகர் நிலையங்களும் இன்று (27-08-94) சனிக்கிழமை முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

இன்றைய தினம் மாலை 4-00 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அனைத்து வணிகப்பெருமக்களும், வணிக ஊழியர்களும், பொது மக்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்

(சி-8699)

முக்கிய அறிவித்தல்

வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்
(கோப்பாய் வட்டப் பிரிவு)

வருடாந்த பொதுக் கூட்டம்

இடம்: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

கடந்த 10-07-1994 ஆம் திகதி நடைபெற இருந்து பிற்போடப்பட்ட மேற்படி கூட்டம் 28-08-1994 ஆம் திகதி (நாளை) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். அனைத்து வணிகர்களும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. பராசசிங்கம்,
தலைவர்.

அ. நாகேஸ்வரன்,
செயலாளர்.

[32565]

கண்ணீர் அஞ்சலி

திருமதி மகாலட்சுமி கனகரட்ணம்

நல்லூர், முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
திரு. கனகரட்ணம்
அவர்களின்

அன்பு மனைவி திருமதி மகாலட்சுமியின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல்
நிர்வாகி,
சு. கனகரட்ணம் குடும்பத்தினர்.

547, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

[32578]

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 02-09-1994

தமிழ்- தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்
ஆங்கில- தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்
அத்துடன்
கேக் ஐசிங்- தலை அலங்காரம்-
பூவேலைகள்

விவரங்களுக்கு:

வட இலங்கை தொழில்நுட்பக்கல்லூரி
(அன்னை பூபதி கலையரங்கம் அருகில்)
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(சி-8700)

---

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அபிரான் தாவீது தம்பிராசா

தோற்றம்: 04-10-1924

மறைவு: 27-08-1987

ஐயா! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பொடும், பண்போடும் நல்லவழி காட்டி வாழவைத்த எங்கள் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்மார்.

இராஜசிங்கம் வீதி,
[illegible]

(32551)

வங்கியாளர் சங்கம், வங்கியாளர் நிலையம்

யாழ். மாவட்டம்

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

இலங்கைவங்கி யாழ். மாவட்ட முகாமையாளர்

திரு. க. கணேசமூர்த்தி

அவர்கள் எதிர்வரும் புரட்டாதிமாதம் 15ஆம் திகதி [15-09-94]அன்று தமது நீண்டகால வங்கிச் சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். அன்னார் பல இடர்களின் மத்தியில் இவ்விரு அமைப்புக்களும் தோன்றுவதற்கு அரும்பணியாற்றியதோடு கடந்த 1½வருடங்களாக எமது இரு அமைப்புக்களின் தலைவராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

அவரது தளராத முயற்சியின் பலன்களை இன்றைய யாழ். மாவட்ட வங்கி ஊழியர்கள் யாவரும் அனுபவித்து வருகின்றார்கள். அவரது வங்கிச்சேவை ஓர் முடிவுக்கு வந்தாலும் எமது சங்கத்துடனான அவரது உறவு மென்மேலும் வளரும் என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

அவரது எதிர்காலம் சந்தோஷகரமானதாகவும் சுபீட்சமானதாகவும் அமைய வேண்டி இறைவனை வேண்டுவதோடு, அவர்தம்பணி தொடர நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.

(சி/8649)

எழுதுவினைஞர் தேவை

கல்வித் தகைமைகள்:-

க. பொ. த சாதாரணதரப் பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.
க. பொ. த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அனுபவம்:-

குறைந்தது 2 வருடங்கள் எழுதுவினைஞராக கடமையாற்றிய அனுபவமுள்ளவராய் இருத்தல் வேண்டும். அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

சம்பளம்:-

பேசித் தீர்மானிக்கப்படும்.

வயது:-

40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

இத்தகைமைகளுடன் மக்கள் நன்மதிப்புப் பெற்ற இருவரின் சிபார்சுக் கடிதத்துடன் 31-8-94 அன்று புதன் கிழமை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் சமூகமளிக்கவும்.

ந. பாலவிநாயகர்
செயலாளர்

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி

(சி/8950)

ஐபன்னா சன சமூக நிலையத்தின்
நூல் நிலைய வளர்ச்சி நிதிக்காக
நடத்தப்படும்
யாழ். மாவட்டத்தின்
முன்னணிப் போட்டியாளர்கள்
கலந்து கொள்ளும்

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம்: கந்தரோடை சவாரி மைதானம்
காலம்: 28-08-1994 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 2.00 மணி

1 ஆம் இடத்தை பெறும் மூன்று பிரிவுக்கும் தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

2 ஆம் — 3 ஆம் இடத்தைப் பெறும் மூன்று பிரிவுக்கும் வெகுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.

அன்பளிப்பு ரூபா **10**

(7618)

நிர்வாகிகள்

கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவன்
க. குகானந்தனின்
அன்புத் தாயார்

திருமதி மகாலட்சுமி கனகரத்தினம்

அவர்களின்

மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

H.N.D.A. II (Eve.) மாணவர்கள்
யாழ்/ தொழில்நுட்பக் கல்லூரி

(32587)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்.

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இருகை ஓசை

கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணியின் வீரவணக்க வெற்றி நாள் விழா நேற்றுத் தமிழீழப் பகுதி எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. இன்றும் அது தொடர்பான நிகழ்வுகள் பரவலாக நடைபெற உள்ளன.

தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தில், ஆயுதப் போராட்டத்தில் ஆண்களுக்கு எந்த வகையிலும் சளைக்காத விதத்தில் பெண்களும் ஈடுபட்டு வருகிறார்கள். உலகத்தின் வேறு எந்த நாட்டினதும் சுதந்திரப் போராட்டத்தில் இல்லாதவாறு, தமிழீழப் பெண்கள் பங்களித்து வருகிறார்கள். உலகம் வியக்கும் வண்ணம், வியந்து பாராட்டும் விதத்தில் வீர சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள்.

சமூகக் கட்டுப்பாடுகளும், சம்பிரதாயங்களும் அடக்கி ஒடுக்கி வைத்திருந்த தமிழ்ப் பெண்களா, ஆண்களை விஞ்சும் வகையில் செயலாற்றுகிறார்கள் என்று பலரும் அதிர்ச்சி அடையும் விதத்தில் தமிழீழப் பெண்கள் தமது திறமை, ஆற்றல் என்பவற்றை வெளிக்காட்டி வருகிறார்கள்.

இவர்களில் கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி மிகப்பெரும் தாக்குதலில் — ஸ்ரீலங்கா கடற்படையின் பெரிய கடற்படைக் கப்பல் ஒன்று காங்கேசன்துறையில் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் — வீரச்சாவடைந்தார். கடற்கரும்புலிகளில் வீரச்சாவடைந்த முதற் பெண் போராளியாக அவர் திகழ்கிறார். அதனால் தமிழீழப் போராட்ட வரலாற்றில் முக்கிய பதிவைச் செய்துள்ளார்.

அங்கையற்கண்ணியின் வீரசாதனை, தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரின் போராட்டப் பாதையில் ஒரு திருப்புமுனையாக அமைந்திருக்கிறது. புதிய பரிமாணங்களில் முன்னேற்றம் கண்டு வரும், பெண் போராளிகளின் போராட்ட வரலாற்றில் இன்னொரு மைல் கல்லாகவும் அமைகிறது.

மிகப் பெரிய அளவில், பெரும் பணச் செலவில், நிறுவன மயப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் முப்படைகளையும் திகில் கொள்ள வைக்கும் விதத்தில், விடுதலைப் புலிகள் நடத்தி வரும் போராட்டம்.

இது வெல்ல முடியாத யுத்தம் என்று படையினருக்கும், சிங்கள தேசத்தவருக்கும் உணர்த்தும் விதத்தில் நாளுக்கு நாள் பலமடைந்து வருவதற்கு போராளிகளின் தியாகமும், திறமையுமே உரமாகவும், உந்து சக்திகளாகவும் விளங்குகின்றன.

மெல்லியர்கள் எனக் கருதப்பட்ட பெண்கள், போராளிகளாக மாறாவிடில் இந்த வலிமையை எய்திருக்க முடியுமா என்று கேட்கும் அளவுக்கு அவர்களின் பங்களிப்பு நிறைந்திருக்கக் காணலாம்.

இரு கைகள் சேர்ந்தால் தான் ஓசை பிறக்கும். போரின் வெற்றி முரசு முழங்குவதற்கும், பரணி பாடுவதற்குமான புதிய யுகத்தை, ஆண்களோடு பெண்களும் கைகோர்த்து நிற்பதால் தான் தமிழர்களால் உருவாக்க முடிந்துள்ளது.

இந்தப் புதிய யுகம், தமிழீழப் பெண்கள் இதுவரை அனுபவித்த அடக்கு முறைகளையும், ஒடுக்குதல்களையும் ஒழிக்கவும் உதவும் என்று நம்பலாம். தமிழர் அடிமை விலங்கு உடைக்கப்படுவதற்கு முன்னரே தமிழீழப் பெண்களுக்கு போடப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகளும், தடைகளும் விலங்குகளும், அறுத்தெறியப்படுவது அவசியம்.

பெண்களுக்கு எதிரான சகலவித ஒடுக்கு முறைகளும் நீக்கப்பட்டு சகல மட்டங்களிலும் அவர்களுக்குச் சம உரிமை வழங்கப்படும் நிலை உலகளாவிய ரீதியில் துரித முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்த உலகச் சூழலைப் பயன்படுத்தியும், தமிழீழப் பெண்களின் சமூக சம நிலை எய்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் பெண்கள் போராடி அல்லது வாதாடித்தான் பெறவேண்டும் என்றில்லாமல் ஆண்கள் தங்களை தாராள மனமுள்ளவர்களாக (Liberal mind) மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாய தேவை உருவாகியிருக்கிறது.

தமிழர்கள் தமது பெண்களுக்குச் சமத்துவம், சம அந்தஸ்து, சம உரிமை கொடுக்காவிடில், அவர்கள் தமக்குச் சுதந்திரம் கேட்பது என்ன நியாயம்?

பேச்சு நடத்த கதிர்காமர் லண்டன் செல்லமாட்டார்!

புலிகளின் உத்தியோகபூர்வமான அறிவிப்பை எதிர்பார்க்கின்றோம்

கேணல் ரத்வத்தை தகவல்

கொழும்பு, ஓக. 27

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உடனடியாக லண்டன் செல்லமாட்டார். நாம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்பார்க்கின்றோம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நாம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நேசக்கரம் நீட்டியுள்ளோம். அதற்கு அவர்களிடமிருந்து உத்தியோகபூர்வ சமிக்ஞையை எதிர் பார்க்கின்றோம்.

அவர்களின் சமிக்ஞை கிடைத்ததும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படும். அதுவரை பாரிய இராணுவ நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற மாட்டா.

விடுதலைப் புலிகளிடம் இருந்து உத்தியோகபூர்வ பதில் கிடைக்கும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாற்றம் இருக்காது. படையினர் எந்நேரத்திலும் அவர்கள் தங்கள் கடமைகளை மேற்கொண்டு வருவார்கள்.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அரசு முன் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

வட பகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்க நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் இது தொடர்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து நியாயமான சமிக்ஞை கிடைக்க வேண்டும். நாம் தடையை நீக்க, அவர்கள் தடையை நீக்காவிட்டால் என்ன செய்வது.

— இவ்வாறு பிரதி அமைச்சர் தெரிவித்தார். [ஒ-எ]

அரசியலை அலசிப்பார்க்கும் நிலையில் இன்று மலையகமக்கள்

நாடாளுமன்றில் சந்திரசேகரன்

கொழும்பு, ஓக. 27

மலையக மக்கள் புதிய சிந்தனை கொண்டுள்ளனர். அவர்களிடம் அரசியலை அலசிப்பார்க்கும் சிந்தனை தோன்றியுள்ளது.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியா மாவட்ட எம். பியுமான திரு. பெ. சந்திரசேகரன் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய சபாநாயகரைப் பாராட்டி அவர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

சிறுபான்மையினரின் கொண்டுள்ள பற்றுதலை நீங்கள் இங்கு தமிழ் மொழியில் பேசும் போது நான் உணர்ந்துகொண்டேன்.

மலையகத் தமிழர்களின் பிரச்சினை பற்றி 17 ஆண்டுகளாக பேசப்பட்டு வந்ததே தவிர. அதற்கு ஒரு இணக்கம் காணப்படவில்லை.

மலையக மக்கள் புதிய சிந்தனை கொண்டுள்ளனர். ஒரேகட்சி, ஒரே தலைமைத்துவத்தை மறந்து, அவர்கள் அரசியலை அலசிப் பார்க்கும் சிந்தனை கொண்டுள்ளனர்.

நான் இங்கு மலையக தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் மட்டும்குரல் எழுப்பவில்லை. மலையக மக்கள் சார்பில் உரை நிகழ்த்துகின்றேன் — இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-எ)

பொது அறிவு போட்டி

கைதடி பொது நூலக ஆலோசனைச் சபையின் ஏற்பாட்டில் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி ம. வியில் பொது அறிவுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பதுளையில் அரசியல் கொலை:

ஐ.தே. கட்சி எம்.பியை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஓக. 27

தேர்தல் தினத்தன்று கந்தகெடிய பகுதியில் இடம்பெற்ற அரசியல் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக— பதுளை மாவட்ட ஐ தே கட்சி எம். பியான சமரவீர வீரவன்னியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி பதுளை நீதிவான் சம்பத்பண்டார அபேகோன் உத்தரவிட்டார்.

கடந்த 16 ஆம் திகதி தாக்குதலுக்கு இலக்கான டி. டி. விக்கிரமரத்தின என்பவர் பதுளை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கடந்த 22 ஆம் திகதி மரணமடைந்தார்.

இவர் முன்னாள் சு. க. எம். பி எட்வின் விக்கிரமரத்னாவின் சகோதரர் ஆவார்.

காலஞ்சென்றவரின் மனைவி மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில் சொன்னதாவது;

சம்பவதினம் வீட்டின் முன்புறத்தில் காலஞ்சென்றவர் வேறு சிலருடன் நாட்டின் அரசியல் நிலவரம் பற்றி பேசிக்கொண்டிருந்தார் அப்போது மூன்று வாகனங்களில் சமரவீர வீரவன்னி தலைமையில் வந்திறங்கிய கோஷ்டி ஒன்று காலஞ்சென்றவரைத்தாக்கியது வீரவன்னியும் பெரிய தடியொன்றினால் காலஞ்சென்றவரைத் தாக்கினார்— என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து எம். பியைக் கைது செய்யும் உத்தரவை நீதிவான் பிறப்பித்தார். (ஒ-எ)

பாதுகாப்பு அமைச்சு விடயத்தில்

எனக்கும் ஜனாதிபதிக்கும் கருத்து முரண்பாடு ஏற்படும்!

அது சகஜம் என்கிறார் ரத்வத்தை

கொழும்பு, ஓக 27

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதிக்கு இருக்கும் கடமைகள், பாதுகாப்புப்பிரதி அமைச்சருக்குரிய கடமைகள் எவை என வரையறுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப்பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் —

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதிக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான தமக்கும் இடையே ஆரம்பத்தில் கருத்து முரண்பாடு ஏற்படவே செய்யும். அது சகஜமே என்றும் அவர் தெரிவித்தார்.

"பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி வகிப்பதை நான் தனிப்பட்ட முறையில் விரும்பவில்லை" — என்றார் அவர்.

"ஜனாதிபதிக்குள்ள கடமைகள், எனக்குள்ள கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. சில விஷயங்களுக்கு ஜனாதிபதியே தலைமை வகிப்பார். நாடாளுமன்றத்துக்கு நான் பதில் கூற வேண்டியுள்ளது. அதனால் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகள் எனக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்"— என்றும் அவர் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் சமுகமளித்து இருந்தனர். (ஒ-எ)

ஐ. தே. கட்சி எம்.பிக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

அவர்களே டி. பியிடம் முறையீடு

கொழும்பு. ஓக. 27

தங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐ.தே. கட்சி எம்.பிக்களும் முன்னாள் அமைச்சர்களும் ஜனாதிபதி விஜேதுங்காவை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த போது, இக்கோரிக்கை விடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாதுகாப்பு வழங்க [illegible] மாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஜ[illegible] விஜேதுங்கா உறுதியளித்தார்.

சந்திரிகாவின் பாதுகாப்பை மறுசீரமைக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஓக. 27

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுசீரமைக்கும்படி அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் தலைவரான சிரேஷ்ட பொலீஸ் அதிபர் கலிங்க அத்தபத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுக்கு திரு. அத்தபத்து தலைவராக நியமிக்கப்படுவாரா என்பது தெளிவாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

முன்னாள் அமைச்சரின் வீட்டில்

காவல் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் சுட்டு கொலை!

ஐ. தே. க. அரசாங்கத்தில் அமைச்சராகப் பணி புரிந்த காமினி லொக்குகேயின் பிலியந்தலை வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற தினம் முன்னாள் அமைச்சர் வீட்டில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

யாழ். தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாது!

ந. ச. ச. கட்சி ஆணையாளருக்கு கடிதம்

கொழும்பு. ஓக. 27

யாழ். மாவட்டத்துக்கான பொதுத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நவசமசமாஜக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது.

இக்கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்னா ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

யாழ். மாவட்டத்தில் நிலவும் போர்க்கால சூழ் நிலையில் அங்கு தேர்தல் நடத்தப்படுவதை எமது கட்சி முழு அளவில் எதிர்த்தது. அங்கு சென்ற 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 95 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிக்க முடியவில்லை. இத்தேர்தலை ஒரு கேலிக் கூத்தாகவே நாம் கருதுகின்றோம்.

யாழ். மாவட்டத்தேர்தல் முடிவுகளை வெளியிடுவதற்கு முன்னர் தேர்தல் ஆணையாளர் எமது கட்சியை கலந்தாலோசிக்கவில்லை.

— இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்றுநடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி பதினாறாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு.

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6 – 6-30 மணிபேராசிரியர் அ. சண்முகதாஸ் சமயப் சொற்பொழிவு. மாலை 6-30 7-30 மணிவரை கனகாம்பிகை பத்மநாதன் இசைக்கச்சேரி. மாலை 7-30 — 8-30 மணிவரை ஆர். எஸ். கேசவமூர்த்தி குழுவினரின் வயலின் சோலோ

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணிக்கு— சமய தீட்சை

பிற்பகல் 2 — மணிக்கு — சமயப் பேருரை

பிற்பகல் 3 — மணிக்கு — புராணப்படிப்பு

மாலை 4 — மணிமுதல் — யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் — [illegible] 6—7 மணிவரை பிரம்மஸ்ரீ [illegible] மூர்த்தியின் கந்தரனுபூதி இசைப் பேருரை

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில்

மாலை 5-30 மணிக்கு — சம்பூர்ண இராமாயணம் தெய்வீக இசைப் பேருரை "உத்தர காண்டம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை . நித்தியானந்தசர்மா. (உ-30-111)

எதிர்க்கட்சி கொறடாவாக மெண்டிஸ்

கொழும்பு, ஓக 27

புதிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி கொறடாவாக முன்னாள் அமைச்சர் விஜேபாலமெண்டிஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பழைய நாடாளுமன்றத்தில் திரு. மெண்டிஸ் போக்குவரத்து அமைச்சராகவும்சபை முதல்வராகவும் பணியாற்றியிருந்தார். (ஒ-எ)

மத்திய மாகாண சபையில் தேவராஜ் அமைச்சராவார்?

கொழும்பு, ஓக. 27

மத்திய மாகாண சபையில் அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு, கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வி அடைந்த முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜை நியமிக்க இ. தொ. கா. தலைமைப் பீடம் முடிவுசெய்திருப்பதாக தெரியவருகின்றது.

மத்திய மாகாண சபையில் தமிழ்க் கல்வி, இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்தவரான இ. தொ. கா. உப தலைவர் திரு. க. சதாசிவம் கடந்த பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்ட எம். பிக்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே திரு. தேவராஜை முதலில் உறுப்பினராக நியமித்த பின்னர் அமைச்சராக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது;

இதேவேளையில்— மேல் மாகாண சபையில் இ. தொ. கா. சார்பில் ஏற்படவிருப்பதாகக் கூறப்படும் வெற்றிடத்துக்கு முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஒருவரின் மகனை நியமிப்பதற்கு இ. தொ. கா. தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

மக்கள் ஆணையைப் பயன்படுத்தி

தீர்வு காணும் வாய்ப்பை பிரதமர் தவறவிடக்கூடாது!

இந்துப் பேரவை கோரிக்கை

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வாய்ப்பை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தவறவிடக்கூடாது.

இலங்கை இந்துப், பேரவையின் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி முன்கண்டவாறு கோரியுள்ளார்.

தேர்தல் மூலமாக மக்கள் வழங்கியுள்ள ஆணை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், ஜனநாயகச் சக்திகளை கட்டியெழுப்புவதற்கும் பயன்படுத்தப்படும் என்று பிரதமர் உறுதி கூறியிருப்பதை பேரவை வரவேற்பதாகவும் இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (ஒ-எ)

ராவின் சிறப்புத் தூதர் சந்திரிகாவை சந்தித்தார்

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் சிறப்புத் தூதரான ஏ. என். வர்மா நேற்றுக் காலை பிரதமர் சந்திரிகாவை அவரது அலரி மாளிகையில் சந்தித்தார்.

இந்தியப் பிரதமரின் கடிதம் ஒன்றை திரு. வர்மா திருமதி சந்திரிகாவிடம் கையளித்தார்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெளியுறவு செயலாளர் ஆர். பி. ஏ. வெலிகேத், அரசியல் பிரிவு பணிப்பாளர் ஏ. கே. பீரிஸ், பிரதமரின் வெளிவிவகார ஆலோசகர் ஜே. வி ராஜபக்ஷ ஆகியோர் பிரதமர் சந்திரிகாவுடனும் —

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நரேஷ்வர் தயாள் இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் ஆர்.கே. பாட்டியா, இந்திய பிரதி தூதர் ஜோர்ஜ் ஆகியோரும் சிறப்புத் தூதருடன்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மாறாத மனங்கள் நூல் வெளியீடு

சுழிபுரம், ஓக. 25

திரு. தி. உதயசூரியன் எழுதிய "மாறாத மனங்கள்" சிறுகதை தொகுப்பு நூலின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும். (எ-28)

17 ஆண்டுகளின் பின்னர்

நிம்மதியாக மூச்சு விடும் புதிய யுகம் உருவாகியுள்ளது

சபையில் அமைச்சர் அஷ்ரப் பேச்சு

கொழும்பு, ஓக. 27

17 ஆண்டுகளின் பின்னர் நாம் நிம்மதியாக மூச்சுவிடும் புதிய யுகத்தின் ஒரு தோற்றம் இங்கு உருவாகியுள்ளது.

அமைச்சர் அஷ்ரப் புதிய சபாநாயகரைப் பாராட்டிப் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மொழி, மதம், இனம் என்ற பேதமில்லா சமூகத்தை எமது அரசின் தலைமைத்துவத்தில் உருவாக்குவோம் என்று ஜனாப் அஷ்ரப் மும்மொழிகளிலும் பேசினார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் பேசினார்.

நல்லை ஆதீனத்தில் பீடாரோகண விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 29 ஆவது வருட பீடாரோகண விழா நாளை (ஞாயிறு) காலை 5 மணி முதல் நடைபெறவுள்ளது.

காலையில் திருமுறை வீதி பஜனையும் தொடர்ந்து சமய தீட்சை, குருமூர்த்திக்கு அபிஷேகம், திருவிழா, கொலு பூஜை என்பன இடம்பெறும்

பஞ்ச சிவாச்சாரியார்களுக்கு விருது வழங்கும் வைபவம் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

மட்டுவில் சிவன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ அ. சிவசாமிக்குருக்கள், கோப்பாய் சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ த. சண்முகநாதக்குருக்கள், கருவில் ஐயனார் கோயில் பிரதம குருவாக விளங்கிய சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள், மாவைக் கந்தசுவாமி கோயில் நித்திய பூசகரான சிவஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் ஆகிய ஐந்து சிவாச்சாரியார்களுக்கு நல்லைக் குருமணி ஸ்ரீ-ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் விருது வழங்கிப் பாராட்டுவார்

திருமுறை நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து பட்டணப் பிரவேசமும் இடம் பெறும், (ஐ)

[illegible]

புலியாள வா!

வெள்ளி மயில் ஏறிவரும் எங்கள் குருநாதா
வேதனைகள் போதுமையா எங்கள் சிவநாதா
பள்ளி செல்லும் சிறார்கள் கூட பாதியிலே இறப்பர்
பைந்தமிழர் குலத்தினையே வீதியிலே சிதைப்பர்

மயிலேறும் மணவாளா எம் மனம் ஏறிவா
மனதோடு இதமாக தமிழ் கூறிவா
வேல் ஏந்தும் வேல் முருகா போர் நீக்க வா- இங்கு
போராடும் நிலை போக்கி புலியாள வா!

— ந. மணிவண்ணன்

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்.

இன்றும் இலவச வைத்திய பரிசோதனை

யாழ்ப்பாணம், ஓக. 27

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு கண்டிக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச வைத்திய பரிசோதனை இன்று சனிக்கிழமையும்—

நல்லூர் மேற்கு வீதியிலுள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். திலகா நகை அகத்தினரின் ஆதரவில் இந்த இலவச வைத்திய பரிசோதனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 27

மானிப்பாய் மேஜர் சுபால் சனசமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "நாமும் எமது போஷாக்கும்" என்ற தலைப்பில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

வைத்திய கலாநிதி என்.பி.ஆர். சீர்மாறன் கருத்துரை வழங்குவார்.

சனசமூக நிலையத் தலைவர் எஸ். கஜேந்திரன் கருத்தரங்குக்கு தலைமை வகிப்பார். (இ)

ஆலயங்களில்

அச்சுவேலி - பத்தைமேனி, தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று சனி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஓ)

அச்சுவேலி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரன் (வயது 7), தர்மரத்தினம் ரமேஸ்வரன் (வயது 9) கனகலிங்கம் சந்திரன் (வயது 10) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இத் தாக்குதலின் போது வைரவர்கோவில் ஒன்றும் சில வீடுகளும் சேதம் அடைந்தன.

வீசப்பட்ட ஷெல்களில் ஒன்று வெடிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதலை அடுத்து இப்பகுதி மக்கள் சிலர் ஆவரங்கால், புத்தூர் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்

நேற்று இரவும் பலாலி இராணுவ முகாமிலிருந்து வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-11)

சந்திரிகா யாழ். வந்தால்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் அனுப்பலாம். அதற்கான பொறுப்பு அவர்களிடம் தான் உள்ளது. நாங்கள் இங்கிருந்து கொழும்புக்குபோகமுடியாது அங்கு எங்களது பிரதிநிதியை அனுப்பமுடியாது.

யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தான் எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்கள் தான் வரவேண்டும்.

கேள்வி:- நீங்கள் பேச்சுக்கு தயார் என அறிவிப்பதை அரசு தனது ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு சாதகமாக பயன் படுத்தலாமே?

பதில்:-நாங்கள் அப்படியாகப் பார்க்கவில்லை. ஒட்டுமொத்தமாக சமாதான முயற்சியாகத் தான் பார்க்கிறோம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதோ அது சம்பந்தமான விசயங்களோ எங்களோடு இந்த சமாதான முயற்சிகளில் வைத்துக் கொள்ளக் கூடாது.

கேள்வி: அரசாங்கம் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்எனஎதிர்பார்க்கிறீர்களா? அல்லது நீங்கள் தீர்வுத்திட்டம் எதையாவது முன்வைப்பீர்களா?

பதில்: அவர்கள் தீர்வுத் திட்டத்துடன் வருகிறார்களோ என்று தெரியாது.

ஆனால் ஏற்கனவே நான் வலியுறுத்தியதுமாதிரி ஆரம்ப பேச்சுவார்த்தைகள் எல்லாம் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுடன் ஆரம்பிக்கலாம்.

பேச்சுக்களை ஆரம்பித்து மக்களின் நல்லெண்ணத்தை பெறும் வகையில் சில காரியங்களை அவர்கள் செய்யலாம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு ஒரு நல்லெண்ண சூழ்நிலை அவசியம். பரஸ்பர நம்பிக்கை அவசியம். சமாதானச் சூழ்நிலை அவசியம். ஆகவே அப்படியான சூழ்நிலையை உருவாக்கி விட்டு முயற்சிகளை எடுக்கலாம்.

அப்படியான சூழ்நிலை உருவான பின்னர் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடக்கும் இந்த ரீதியில் அவர்களுடைய நிலைப்பாடு என்ன என்பது அவர்களுக்கு தெரியவரும் எங்கள் நிலைப்பாடு என்ன என்பதையும் நாங்கள் சொல்லலாம்.

அவர்கள் ஏதாவது தீர்வுத் திட்டத்தை கொண்டு வந்து வந்தால் நாங்கள் அதை பரிசீலனை செய்வோம்.

கேள்வி: பிரதமர் சந்திரிகா விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன்தான் பேசப்போவதாக கூறிவருகிறார். அவர் வரும் பட்சத்தில் தலைவர் பிரபாகரனுடன் பேசமுடியுமா?

பதில்: சந்திரிகா இங்கு வந்தால் தேசியத் தலைவருடன் பேச முடியும்.

கேள்வி: வடக்கு-கிழக்கை இணைக்க முடியாது வேறு மாதிரியான ஒரு தீர்வு தரலாம் என சந்திரிகா கூறியிருக்கிறார் அதுபற்றி கூறமுடியுமா?

பதில்: அதுபற்றி எங்களிடம் சொல்லட்டும். தேர்தல் பிரசாரங்களில் சொன்னது போல தமிழ்மக்களின் தீர்வு பற்றி சொல்லட்டும்.

இது சம்பந்தமாக அவர் சில சமயம் தீர்வுத் திட்டங்கள் வகுத்திருக்கலாம். அதை இன்றும் வெளியில் விடாமல்வைத்திருக்கலாம்.

இந்த நேரத்தில் நாங்கள் சில வரையறைகளைப் போடக்கூடாது.

வடக்கு - கிழக்கு இணைந்தால்தான் உங்களுடன் பேசுவோம், என்று நாங்கள் நின்றாலோ, அல்லது தமிழீழத்தை கைவிட்டால்தான் நாங்கள் உங்களோடு பேசுவோம் என்று அவர்கள் நின்றாலோ பேச்சுவார்த்தை நடக்காது.

ஆகவே அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதை எங்களுடன் கதைக்கலாம்.

கேள்வி: பேச்சுவார்த்தைக்கு அரசுக்குள்ளும், தெற்கிலும் எதிர் கருத்து நிலவுவது போல் தெரிகிறது அப்படியானால் பேச்சுவார்த்தை நடக்கக்கூடிய சூழ்நிலை உண்டா?

பதில்: பேச்சுவார்த்தையில் பிரச்சினை இராது. சமாதான தீர்வு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துத் தான் இந்த அரசாங்கமே பதவிக்கு வந்தது.

ஆனால் தமிழருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதில் சிக்கல் வரலாம். அதைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. அதை பின்னர் தான் பார்க்கலாம்.

கேள்வி: அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்போவதாகக் கூறியுள்ளது. அப்படி விடுதலை செய்தால் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுதலை செய்வீர்களா?

பதில்: பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கினால் எங்கள் பாதுகாப்பில் உள்ள கைதிகளை விடுதலை செய்வோம் என்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

சமீபகாலத்தில் இராணுவத்தினர் சிலர் கைதிகளாக உள்ளனர். சுமார் 20 பேர் உள்ளனர் அவர்களை விடுதலை செய்வதாக இருந்தால் எங்கள் போராளிகளை கைதி பரிமாற்றத்தின் அடிப்படையில் விடுதலை செய்யலாம்.

இருதரப்பினர் எம்மிடம் கைதிகளாகஉள்ளனர் ஒரு தரப்பினர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தவர்கள் இவர்களை விடுதலை செய்ய பேச்சுக்கள் நடத்தி ஒரு நிபந்தனை விதித்திருந்தோம். பொருளாதாரத் தடையை நீக்கினால் அவர்களை விடுவோம்.

பூநகரிச் சண்டையின்போது 20 இராணுவத்தினர் எம்மிடம் சேர்ந்துள்ளனர். இவர்களை விடுதலை செய்யத் தயார். அரசு கைது செய்து வைத்துள்ள எமது போராளிகளை கைதி பரிமாற்றம் மூலம் விடுதலை செய்தால் இவர்களை விடுதலை செய்வோம்.

கேள்வி: சந்திரிகாவுடன் தற்போது இணைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப்போவதாகக் கூறினால் தங்கள் நிலை என்ன?

பதில்; பேச்சுவார்த்தைகள் ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுடன். தமிழ் பேசும் மக்களின்— முஸ்லிம் மக்களின் பிரச்சினையையும் உள்ளடக்கியதாக அமையும்.

தமிழர் தாயகம் என்று சொல்லும்போது தமிழ்பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான தாயகத்தைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

அப்படியிருக்கையில்— தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம் மக்களின் பிரச்சினையும் அடங்கும்.

ஆகவே முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள், ஒட்டு மொத்தமான தீர்வுத் திட்டத்தில் பங்களிப்பதை நாங்கள் வரவேற்கத் தான் செய்வோம்.

கேள்வி: ஒரு வருடத்தில் சகல அகதிகளையும் அந்த அந்த இடங்களில் மீளக்குடியேற்றுவேன் என்று புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப் கூறியுள்ளார். அந்நிலையில் இங்கிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் அகதிகள் யாழ்ப்பாணம் வந்தால் என்ன செய்வீர்கள்?

பதில்: இதை நாங்கள் தெளிவாகச் சொல்லவேண்டும்.

யாழ். குடாநாட்டில் ஏற்கனவே 3 லட்சம் மக்கள் அகதிகளாக உள்ளனர்.

அதாவது தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த குடியிருப்புப் பிரதேசங்களை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்ததால் தீவுப்பகுதி மாதகல், வலிகாமம், பூநகரிப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம் மக்கள் குடியிருந்த வீடுகளில்தான் தற்போது தங்கி இருக்கிறார்கள்

ஆகவே இந்த மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு திரும்பிச்சென்று தங்கள் வீடுகளில் வாழும் சூழ்நிலை வர வேண்டும்.

ஆகவே தீவுப்பகுதி, வலிகாமம், பகுதிகளை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் வாபஸ் பெற்று தமிழ் அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான சூழ்நிலை பிறக்குமானால் நிச்சயமாக நாங்கள் முஸ்லிம் மக்களைத் திரும்ப யாழ்ப்பாணத்துக்கு அழைப்போம்.

ஆகவே அஷ்ரப் என்ன செய்யவேண்டுமானால், முஸ்லிம் மக்கள் மட்டும் அகதிகள் அல்லர். இங்கு தமிழ்மக்களும் அகதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலையைஏற்படுத்த முயற்சிக்கவேண்டும்.

அப்படி தமிழர்கள் திரும்பிப்போக வாய்ப்பு ஏற்பட்டால் — நாங்கள் முஸ்லிம் மக்களைத் திருப்பி அழைத்து அவர்களை குடியிருப்புக்களில் இருக்க அனுமதிப்போம்.

கேள்வி: பேச்சுவார்த்தைக்கு வரும் அரசாங்க பிரதிநிதி யார் என்பதை புலிகள்தான் தீர்மானிப்பார்களா? அல்லது அரசு தீர்மானிக்குமா?

பதில்: அரசாங்கம் அது குறித்து தீர்மானிக்கும் அது போல எங்கள் தரப்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவர்கள் குறித்து எமது தலைமைப்பீடம் தீர்மானிக்கும்.

கேள்வி: அகதிகள் மீளக் குடியேற, இராணுவத்தை வாபஸ்பெறக் கேட்பீர்களா?

பதில்: நாங்கள் உடனடியாக வடக்கு-கிழக்கில் இருந்து முழுமையாக இராணுவத்தை வாபஸ் பெறக் கேட்கவில்லை.

இரண்டாம் கட்ட ஈழப் போர்க்காலத்தில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த தீவுப்பகுதிகள் உட்பட பல பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

தீவுப்பகுதி, வலிகாமம், மாதகல் பகுதி [illegible] பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்.

பேச்சுவார்த்தையைப் பொறுத்து, அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வாக — அதாவது தமிழ், முஸ்லிம் அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வாக இராணுவம் சில இடங்களில் இருந்து வாபஸ் பெறலாம்.

அளவெட்டி, அல்லது மாதகல் போன்ற பகுதிகளில் இருந்து இராணுவம் வாபஸ் பெறுவது வேறு. பலாலியில் இருந்து வாபஸ் பெறுவது வேறு. பலாலியில் இருந்து இராணுவத்தைப் போகச் சொல்லி நாங்கள் கேட்கவில்லை.

ஆக்கிரமிப்பு நிகழ்த்திய குடியிருப்புப் பகுதிகளில் இருந்து இராணுவம் வாபஸ் பெறுவது பெரிய விசயமென்றாலும் நல்லெண்ணத்துக்காக செய்யலாம். அகதிகள் பிரச்சினை தமிழ்மக்களின் பாரிய அன்றாடப் பிரச்சினைகளில் ஒன்றுதான்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் பதில் கிடைக்கும்வரை அரசு பாரிய தாக்குதல் ஒன்றையும் செய்யமாட்டாது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த கூறியுள்ளார். அப்படி அரசு பாரிய இராணுவத் தாக்குதல் எதனையும் செய்யவில்லை ஆனால் விடுதலைப் புலிகள்...?

பதில்: நாங்களும் பாரிய இராணுவத் தாக்குதல் செய்யவில்லையே.

கேள்வி: கரும்புலித் தாக்குதல் போன்றவை நடக்கிறதே?

பதில்: பூநகரித் தாக்குதலின் பின்னர் பாரிய இராணுவ நடவடிக்கை இடம்பெறவில்லை. 4 ஆயிரம், 5 ஆயிரம் படையணிகளைக் கொண்டு பெரிய இராணுவ முகாம்களை தாக்குவதுதான் பாரிய இராணுவ நடவடிக்கை. இராணுவ நடவடிக்கையில் இறங்கவில்லை என்று அனுருத்த சொல்கிறார். ஆனால் தொடர்ச்சியாக வடமராட்சியில் கடற்படை தாக்குதல் நடத்துகிறது. ஷெல்தாக்குதல் நடக்கிறது.

யுத்தநிறுத்தம் ஒன்று இல்லாத பட்சத்தில் இரு தரப்பிலும் இருந்தும் சிறுசிறு நடவடிக்கைகள் இருந்துகொண்டு தான் இருக்கும்

ஆகவே அனுருத்த பொதுவாக பெரிய நடவடிக்கை எதுவும் செய்யமாட்டேன் என்று சொன்னால் நாங்களும் செய்யமாட்டோம் என்று கூறுவோம்.

ஆகவே அவர்கள் ஓர் போர் நிறுத்தத்துக்கான வழிவகைகளை உடன் செய்ய வேண்டும். புலிகளுடன் கதைத்து இருதரப்பினரும் சேர்ந்து போர்நிறுத்தம் செய்வோம்— இருதரப்பினரும் சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துகிறோம் — என்ற உடன்பாட்டுக்கு வரவேண்டாமா?

அதற்கான முயற்சி அரசாங்கத் தரப்பில் இருந்தேவா வரவேண்டும்

போர் நிறுத்தம் செய்வார்கள் என்று இவர்களை நம்பிக் கொண்டு நாங்கள் சும்மா இருக்கலாமா?

கேள்வி: போர் நிறுத்தம் வந்தால் அதனைக் கண்காணிக்க குழு ஏதாவது அமைக்கப்படுமா?

பதில்: போர் நிறுத்தம் பற்றி பேசும் போதே வேண்டுமானால் கண்காணிப்புக் குழு பற்றிய விடயமும் அதற்குள் சேர்த்துக் கொள்ளப்படும்.

கேள்வி: பூநகரி பாதையை திறக்கச் சொல்லி நீங்கள் கேட்கிறீர்கள் அரசாங்கம் ஆனையிறவை திறக்கப் போவதாகக் கூறினால் உங்கள் நிலைப்பாடு என்னவாகயிருக்கு ?

பதில்: ஆனையிறவில் இருந்து படை வாபஸானால் அந்தப் பாதையைத் திறக்க நாங்கள் அனுமதிப்போம். இராணுவச் சோதனையில்லாது இருந்தால் அதை திறக்கலாம்.

இராணுவச் சோதனையின்றி மக்கள் சுதந்திரமாக செல்ல வேண்டும் என்பதே எமக்கு முக்கியம்.

ஆனையிறவுப் பாதையைத் திறப்பது என்பது அரசுக்கு அனுகூலமாக இருக்கும் என்பதால், நாம் பூநகரி பாதையைத் திறக்குமாறு கோருகிறோம்.

ஆனையிறவு பாரிய முகாம் ஆனபடியால், அதனை வாபஸ் பெற்று போக்குவரத்துக்கு திறப்பது இலகுவான விடயமாக இருக்கும் பூநகரி முகாம் சிறிய முகாம் அதை வாபஸ் பெறலாம்.

கேள்வி: சமஷ்டி முறையான தீர்வை ஏற்பதாக முன்னர் தெரிவித்திருந்தீர்கள் புதிய அரசு அந்த தீர்வை முன்வைத்தால் ஏற்பீர்களா?

பதில்: வடக்கு — கிழக்கு இணைந்த முழுமையான சமஷ்டி சுயாட்சி தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதை பரிசீலனை செய்ய முடியும் என்று தலைவர் ஏற்கனவே கூறியிருக்கிறார் அரசு முன்வைத்தால் அதை நாம் பரிசீலனை செய்வோம்.

கேள்வி: பேச்சுவார்த்தைகளில் யார் பங்குபற்றலாம் என்று நீங்கள் கூறுவீர்களா?

பதில்: அரசு தான் அதை முடிவு செய்ய வேண்டும்: நாம் நேரடியாக அரசுடன் பேசவே விரும்புகிறோம். (ஓ-3)

நிபந்தனை இல்லாத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரியை திறந்து விடலாம்

இந்த வகையில் பூநகரிப் பாதையை அரசாங்கம் திறந்து விடலாம்.

பூநகரியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற்று, அப்பாதையூடாக மக்கள் போக்குவரத்தை அனுமதித்தால் அதனை ஓர் ஆக்கபூர்வமான சமாதான முயற்சியாகவே நாம் கருதுவோம்

தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில், சமாதான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன், சந்திரிகா அரசு சில உருப்படியான காரியங்களைச் செய்யலாம். இப்படியான காரியங்களைச் செய்ய முனையும்போது புதிய அரசாங்கத்துக்கு முட்டுக்கட்டைகளும் எழலாம்.

இது ஒரு முழுமையான ஆட்சி அதிகாரங்கள் அற்ற அரசு என்பதை நாம் அறிவோம்.

பாதுகாப்பு விவகாரங்கள், படைத்துறை சம்பந்தமான அதிகாரங்கள் எல்லாம் ஜனாதிபதி விஜேதுங்காவின் கையில் இருக்கின்றன. எனவே ஜனாதிபதி விரும்பினால் முட்டுக் கட்டைகள் போடலாம்.

அநீதிகளுக்குமுடிவு வேண்டும்

ஆனால் சமாதானம், போர் நிறுத்தம், சகஜநிலையை தோற்றுவிப்பது என்பன சகல மக்களினதும் ஏகோபித்த அபிலாஷையாக இருக்கின்றன. இந்த வெகுஜன அபிலாஷைக்கு எதிராக ஜனாதிபதி முட்டுக்கட்டை போட முனைந்தால், அது அவரது துரிதமான வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றே நாம் கருதுகிறோம்.

போரும், பொருளாதாரத் தடையும், போக்குவரத்துத் தடையும் எமது மக்களுக்கு எதிராக திணிக்கப்பட்ட அநீதிகள்.

இந்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ அரசாங்கத்துக்கு எவ்விதமான அனுகூலத்தையும் பெற்றுக் கொடுக்கவில்லை

பதிலாக, தமிழ் மக்களின் வெறுப்பைத் தான் தேடிக் கொடுத்தது. அத்தோடு இந்த நடவடிக்கைகள் இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கின. பெரும் உயிரழிவுக்கும், பொருள் அழிவுக்கும், துன்பத்துக்கும் வழிகோலின.

எனவே சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் புதிய அரசாங்கம் உண்மையில் விரும்பினால், இந்த அநீதிகளுக்கு முடிவு கட்டவேண்டும்.

மக்களின் அன்றாட பிரச்சினை

ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை இரண்டு பரிமாணத்தில் அணுகலாம்.

ஒன்று, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள். அடுத்தது, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள்.

ஆரம்பகால பேச்சுவார்த்தைகளில் பெரும்பாலும், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை சம்பந்தமாகவே அமையும் என நினைக்கிறோம்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை என்றால், போர் அனர்த்தங்கள், அழிவுகள், சாவுகள், பொருளாதாரக் கஷ்டங்கள், விலைவாசி உயர்வு, வேலையில்லாப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை என்று ஏராளமான நாளாந்த — அன்றாடப் பிரச்சினைகள் — உண்டு.

அடிப்படை பிரச்சினைகள் வேறு. அதாவது தமிழரின் தாயகப் பிரச்சினை, கோட்பாடு, தேசியப் பிரச்சினை, தன்னாட்சி உரிமைப் பிரச்சினை. இவை அடிப்படைப் பிரச்சினைகளைக் குறித்து நிற்பது.

ஆகவே முதல் கட்டமான பேச்சு வார்த்தைகள் மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது சம்பந்தமாகவே அமைய வேண்டும் என்று நம்புகின்றோம்.

அதேவேளை அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் நாங்கள் பேச்சுக்களை நடத்துவோம்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில், மக்களின் அவலங்களை பார்க்கும் போது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு [illegible] தெரிவித்தார்,

(ஓ-3-9)

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம்

முதற்பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணி கப்பலை தகர்த்த வெற்றி நாளை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்களுக்கும் 27-08-1994 சனிக்கிழமை விடுமுறை தினமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்.

(சி/8954)

---

31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு
09–04–1974

இறப்பு
28–07–1994

செல்வன்

சோமசுந்தரம் இதயச்சந்திரன்

இதயா! நீ எமைப் பிரிந்தாயா!
உன் நினைவில் வாடுகிறோம்.

(27-08 1994) திகதி இன்று எமது இல்லத்தில் நடைபெறும் எமது மகனின் அந்தியேட்டியின் போது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

இன்பன் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

(32589)

மரண அறிவித்தல்கள்

திருமதி அவையாம்பிகை நவரெட்ணம்

(அம்மன்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அவையாம்பிகை நவரெட்ணம் அவர்கள் கண்டியில் காலமாகிவிட்டார்.

இவர் செல்வவிநாயகம் நவரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜா, சண்முகராஜா, காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி, கமலாதேவி ரெட்ணராஜா, செல்வராணி, ஆறுமுகபாறிபரன் (குமரேசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அழகேந்திரராஜா, முத்துலிங்கம் ஜெ.சி. சண்முகராஜா, ரூபா, ரஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், வளர்மதி, சூரியகுமார், ஸ்ரீ நந்தினி, ஷபந்தன், பிறேம், கீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக கண்டியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று சனிக்கிழமை (27-08-94) எடுத்துச் செல்லப்படும் என உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்;

N. குமரேசன் (மகன்)

131, அரசடிறோட்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

(32577)

திருமதி

லலிதாம்பாள் விஸ்வநாதக்குருக்கள்

உடுவில் பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்களின் மனைவி லலிதாம்பாள் நேற்று (26-08-1994) காலமானார்.

இவர் பரமேஸ்வரன் ஐயர், திருமதி வாலாம்பிகை அம்மா, சிவகாமிக் குருக்கள், பரிபூரணானந்தசர்மா [ஆசிரியர், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை] ஆகியோரின் தாயாரும், திருமதி பராசக்தி. சிவசுப்பிரமணிய ஐயர், திருமதி ஹம்சகமலாம்பிகை, திருமதி ரேவதி அம்மா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று [27-8-94] சனிக்கிழமை பகல் 11 மணியளவில் உடுவிலில் நடைபெறும். சகலரும் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வி. பரிபூரணானந்தசர்மா
'மகன்'

[சி-8953]

முத்துக்குமார் கிருஷ்ணமூர்த்தி

வட்டுக்கோட்டை, கண்டி வீதியைச் சேர்ந்தவரும் உணவுக்கட்டுப்பாட்டு இலாகா (கொழும்பு) வில் கடமை ஆற்றியவரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிரானைச் சேர்ந்த சிவநேசர். சிவகுமார் திருமதி ஜெயலிங்கம் பகவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், டென்மார்க்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஜெயலிங்கம் அவர்களின் அன்பு மாமனாரும், செல்வன் ஜெயலிங்கம் காண்டீபனின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற முத்துக்குமார் கந்தசாமி, முத்துக்குமார் இரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரரும், செல்லையா துரைராசா அவர்களின் அன்பு மைத்துனருமாகிய முத்துக்குமார் கிருஷ்ணமூர்த்தி வியாழக்கிழமை (25-8 1994) இரவு 11.30 மணியளவில் காலமானார்

அவரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [27-8-1994) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். உறவினர், நண்பர்கள் யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கிருஷ்ணமூர்த்தி சரஸ்வதி
(மனைவி)

செ. துரைராசா
(மைத்துனர்

கண்டி வீதி,
வட்டு. தென்மேற்கு
வட்டுக்கோட்டை.

(32584)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/3 இல் உள்ள அச்சகத்தில் 27 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.